பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**04 06 2026** **6 30**

வியாழக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** நாட்டில் பெட்ரோலியப் பொருட்கள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**2)** சட்டவிரோதமாக கனிமங்கள் கடத்தப்படுவதை தடுக்க நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துமாறு முதலமைச்சர் திரு. விஜய் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

**3)** தனியார் பள்ளிகள் கட்டண விவரங்களை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**4)** பெண் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய முதலமைச்சர் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**5)** இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **M.R. Arjun - Amsakarunan** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<>>>>

நாட்டில் பெட்ரோலியப் பொருட்கள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்கள் சந்திப்பில் இதைத் தெரிவித்த பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி சுஜாதா ஷர்மா, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, இயற்கை எரிவாயு ஆகிய அனைத்தும் கையிருப்பில் உள்ளதாகவும், நாட்டின் எப்பகுதியிலும் பற்றாக்குறை எழவில்லை என்றும் தெரிவித்தார்.

சமையல் எரிவாயுக்கான பதிவுகள் 99 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், OTP அடிப்படையிலான சிலிண்டர் வினியோகம் 96 சதவீதத்தை எட்டியிருப்பதாகவும் அவர் கூறினார்.

பெட்ரோலியப் பொருட்களை பதுக்குவதையோ, அல்லது கள்ளச்சந்தையில் விற்பதையோ தடுக்கும் வகையில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த மார்ச் மாதம் 8 லட்சம் புதிய குழாய் வழி இணைப்புகளுக்கு சமையல் எரிவாயு வினியோம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 3 நாட்களில் ஒரு கோடியே 43 லட்சம் வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்களும், 19 லட்சம் டன் வர்த்தக சிலிண்டர்களும் வினியோகிக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி சுஜாதா ஷர்மா கூறினார்.

<<<<>>>>

சட்டவிரோதமாக கனிமங்கள் கடத்தப்படுவதை தடுக்க நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துமாறு முதலமைச்சர் திரு. விஜய் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று இயற்கை வளங்கள் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர், கனிம வருவாயைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி குத்தகைக்கு விடப்பட்ட கனிம குவாரிகளை கண்காணிக்கவும், எல்லைகளை நிர்ணயம் செய்து அளவீடு செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

தனியார் பள்ளிகள் கட்டண விவரங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

**(Voice Byte — Rajmohan — 48 Sec)**

<<<<>>>>

தமிழக சட்டமன்றத்தின் புதிய செயலாளராக திருமதி சாந்தி இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

இப்பதவியில் இருந்த திரு. சீனிவாசன் ராஜினாமா செய்ததையடுத்து திருமதி சாந்தி புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் நிரப்பப்படாமல் உள்ள 152 உயர் சிறப்பு மருத்துவப் படிப்புக்கான இடங்கள் அகில இந்திய தொகுப்பிற்கு மாற்றப்படுவதை தடுக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக முதலமைச்சர் திரு. விஜயக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மாநிலத்தில் உள்ள அரசுப் பணி மருத்துவர்களை உயர் சிறப்பு மருத்துவப் படிப்புக்கான இடங்களில் சேர்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

சென்னையில் உள்ள மின்துறை தலைமை அலுவலகத்தில் டெண்டர் தொடர்பான தரவுகள் பதிவு செய்யப்பட்டிருந்த 18 ஹார்ட் டிஸ்குகள் காணாமல் போயிருப்பது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இதுகுறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு உண்மையை வெளிக்கொண்டுவர மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்த சம்பவத்தில் உள்நோக்கம் இருப்பதாகவும், யாரையோ காப்பாற்றும் முயற்சி நடைபெறுவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கை பராமரிக்கவும், பெண் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்யவும் முதலமைச்சர் திரு. விஜய் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நேற்று திருச்சி மாவட்டத்தில் 14 வயது சிறுமியும், தூத்துக்குடி மாவட்டத்தில் 17 வயது சிறுமியும் கடத்தப்பட்டிருப்பதாக வந்துள்ள செய்தியை குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தென்மேற்கு பருவமழை காரணமாக அடுத்த 3 நாட்களுக்கு கன்னியாகுமரி, நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - துரை - 50 செகண்ட்ஸ்)

<<<<>>>>

சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான மத்திய அரசின் திட்டம், திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனையால், அனைத்து சிகிச்சைகளும் ஒரே இடத்தில் கிடைப்பதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் — பயனாளிகள் 28 செகண்ட்ஸ்)

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம், திருப்புக்குழி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இன்று நடைபெற்ற மாணவர் சேர்க்கை கொண்டாட்ட நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு. தென்னரசு மற்றும் திரு. ரஞ்சித்குமார் மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் புத்தக பைகளை வழங்கினர்.

-------------

திருவள்ளூர் மாவட்டம் கரிக்கலவாக்கம் ஊராட்சியில் சுமார் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன கட்டிடத்திற்கு ஆட்சியர் திருமதி கவிதா அடிக்கல் நாட்டினார்.

-------------

மயிலாடுதுறை தேசிய துவக்கப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தை ஆட்சியர் திரு. ஸ்ரீகாந்த் இன்று ஆய்வு செய்தார்.

-------------

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியராக திருமதி துர்கா மூர்த்தி இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

-------------

தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு ஊராட்சி ஒன்றிய பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் மற்றும் கல்வி உபகரணங்களை மாநில அமைச்சர் திரு. மதன் ராஜா வழங்கினார்.

-------------

பெரம்பலூர் மாவட்டம் நெடுவாசல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உதவி ஆணையர் திருமதி சிவக்கொழுந்து ஆய்வு செய்தார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **M.R. Arjun - Amsakarunan** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜகார்த்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **16-21, 21-15, 21-19** என்ற செட் கணக்கில் மலேசியாவின் **Khai Xing Kang - Aaron Tai** இணையை வென்றது.

-------------

உலக குத்துச்சண்டை வீராங்கனைப் பட்டியலில் **57** கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Jaismine Lamboria** முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

**48** கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் மீனாக்ஷி தொடர்ந்து முதலிடத்திலும், ப்ரீத்தி மூன்றாது இடத்திற்கும் முன்னேறினர்.

ஆடவர் பிரிவில் இந்தியாவின் சச்சின், நரேந்தர் ஆகியோர் முதல் **5** இடத்திற்குள் முன்னேறியுள்ளனர்.

**70** கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் குத்துச்சண்டை வீரர் **Hitesh** ஆறாவது இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

**<<<<The End>>>>**